# திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

## சேர்க்காடு, வேலூர் - 115

# அடித்தளப்படிப்பு

## பகுதி – 1 தமிழ்

அனைத்து இளநிலைப் பட்டப்படிப்புப் பிரிவுகளுக்கும் பொதுவானவை

# முதலாண்டு

# இரண்டாம் பருவம்

# 2020 - 2021

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | அடித்தளப் படிப்பு (பி.ஏ.,பி. எஸ்ஸி., பி.காம்., பி.பி.ஏ) |
| முதல் பதிப்பு | : | ஜனவரி - 2021 |
| உரிமை | : | திருவள்ளுவர் பல்கலைக்கழகம் |
| விலை | : | திருவள்ளுவர் பல்கலைக்கழகப் பாடத்திட்டக்குழு<br>வேலூர் - 115. |
| அச்சாக்கம் | : | |
| நூல் கிடைக்குமிடம் | : | திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,<br>சேர்க்காடு, வேலூர் -115 |

# பாடத்திட்ட வல்லுநர்குழுத் தலைவர்

**முனைவர் வீ. பன்னீர்செல்வம்**
தமிழ் உதவிப்பேராசிரியர்
பெரியார் அரசு கலைக்கல்லூரி
கடலூர்.

## பாடத்திட்ட வல்லுநர் குழு

முனைவர் **சுப்புலட்சுமி**
தமிழ் இணைப்பேராசிரிர்
அரசு கலைக்கல்லூரி
திருவண்ணாமலை.

முனைவர் **S. கோகுலகிருஷ்ணன்**
தமிழ் உதவிப்பேராசிரியர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

முனைவர் **K.சீனிவாசன்**
தமிழ் உதவிப்பேராசிரியர்
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி
செய்யாறு.

முனைவர் **டி.விஷ்ணுகுமரன்**
தமிழ்த்துறைத் தலைவர்
திராவிடன் பல்கலைக்கழகம்
சித்தூர் மாவட்டம்
ஆந்திர மாநிலம்.

முனைவர் **அ. அன்னம்மாள்**
தமிழ் உதவிப்பேராசிரியர்
புனித வளனார் கலை(ம) அறிவியல் கல்லூரி
கடலூர்.

திருமிகு.**பவா. செல்லதுரை**
பதிப்பாளர், எழுத்தாளர்
திருவண்ணாமலை.

முனைவர் **வெங்கடகிருஷ்ணன்**
தமிழ் உதவிப்பேராசிரியா
இஸ்லாமிய கல்லூரி
வாணியம்பாடி.

முனைவர் **M. பாலமுருகன்**
தமிழ் உதவிப்பேராசிரியர்
அரசு கலைக்கல்லூரி
திருவண்ணாமலை.

முனைவர் **J. ஜெயக்குமார்**
தமிழ் உதவிப்பேராசிரியர்
**K.M.G.**கலை அறிவியல் கல்லூரி
குடியாத்தம்

# இரண்டாம் பருவம்

# பொருளடக்கம்

# இளநிலைப் பட்டப்படிப்பு

## அடித்தளப் படிப்பு – பகுதி -1 தமிழ்
## முதலாமாண்டு – இரண்டாம் பருவம் 2020 – 2021

**அலகு – 1 கவிதை**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருநாவுக்கரசர் | - | திருவதிகை பதிகம் (கூற்றாயினவாறு விளக்களீர் - முதல் 5 பாடல்கள்) |
| 2. | மாணிக்கவாசகர் | - | அச்சோபதிகம் (முக்தி நெறியே அறியாத – முதல் 5 பாடல்கள்) |
| 3. | திருமூலர் | - | கல்வி (முதல் 5 பாடல்கள்) |

**அலகு -2**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆண்டாள் | - | நாச்சியார் திருமொழி (கற்பூரம் நாறுமோ – எனத் தொடங்கும் 5 பாடல்கள் மட்டும்) |
| 2. | குலசேகராழ்வார் | - | பெருமாள் திருமொழி (4-ஆம் திருமொழி) |
| 3. | நம்மாழ்வார் | - | உயர்வர உயர்நலம் உடையவன் (எனத் தொடங்கும் 5 பாடல்கள்) |

**அலகு -3**

| | | | |
|---|---|---|---|
| **1.** | **பலபட்டடை சொக்கநாதப்புலவர்** | **-** | **அழகர் கிள்ளை விடு தூது** |
| 2. | ஜெயங்கொண்டார் | - | கலிங்கத்துப்பரணி (கடைத்திறப்பு) |
| 3. | முக்கூடற்பள்ளு | - | ஏசல் |

**அலகு -4**

| | | | |
|---|---|---|---|
| 1. | கண்ணதாசன் | - | ஏசுகாவியம் (ஊதாரிப்பிள்ளை) |
| 2. | குணங்குடி மஸ்தான் சாகிபு | - | மஸ்தான் சாகிபு பாடல்கள் பரா பரக்கண்ணி (1-40 கண்ணிகள்) |
| **3.** | **பட்டினத்தார் பாடல்கள்** | **-** | **திருவிடை மருதூர் (காடே திரிந்து – எனத் தொடங்கும் பாடல் பா.எண்.279, 280)** |

**அலகு -5**

1. நேர்காணல்
2. நாளிதழுக்கு அறிக்கைத் தயாரித்தல்
3. பாடப்பகுதியையொட்டிய இலக்கிய வரலாறு

சைவ, வைணவ சமய இலக்கியங்கள், கிறிஸ்துவமும் தமிழும், இஸ்லாமியமும் தமிழும்.

# முதலாம் ஆண்டு - இரண்டாம் பருவம்

# அலகு -1 கவிதை

## திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர், திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூர் என்னும் ஊரில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் மகனாகத் தோன்றினார். இவரது இயற்பெயர் மருள் நீக்கியார். இளம் வயதிலேயே பெற்றோரை இழந்துவிட்ட இவர் தம் தமக்கையார் திலகவதியாரால் வளர்க்கப்பட்டார். இளம் பருவத்தில் இவர் சமண சமயத்தில் தருமசேனர் என்ற பெயரில் சேர்ந்திருந்தார். பின்னர் திலகவதியார் முயற்சியால் சைவம் தழுவினார். திருநாவுக்கரசர் என்ற அருட்பெயரையும் பெற்றார். இவர் தம்முடைய பாடல்களில் 'தாண்டகம்' என்னும் பாவைக்கையாண்டு சிறக்கப் பாடியதால் 'தாண்டக வேந்தர்' என்னும் அழைக்கப்பட்டார். திருநாவுக்கரசர் சைவராகிவிட்ட செய்தியை அறிந்த பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் அவரைச் சுண்ணாம்புக் கால்வாயில் இட்டும், நஞ்சு கலந்த உணவை உண்ண வைத்தும் கப்பலில் கட்டிக் கடலில் வீசியும் துன்புறுத்தினான். இறைவன் அருளால் அக்கொடுமையிலிருந்து மீண்டதோடல்லாமல் கொடுமைகள் புரிந்த மகேந்திரவர்மனையே சைவனாக்கிவிட்டார். எண்பத்தோர் ஆண்டுகள் உலகத்தில் வாழ்ந்து இறைப்பணியும் தமிழ்ப்பணியும் புரிந்தார். திருஞான சம்பந்தரால் 'அப்பா' என்று அன்புடன் அழைக்கப்பட்டார். இவர் பாடிய பதிகங்கள் 4900. இன்று கிடைத்திருப்பன 312 பதிகங்கள் மட்டுமே. இவருடைய பாடல்கள் பன்னிரு திருமுறையில் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன.

### திருவதிகைப் பதிகம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக் கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடி அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே - 01

நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன் நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்இது வொப்பது கண்டறியேன் வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகிவந் தென்னை நலிவதனை நணுகாமல் துரந்து கரந்தும் இடர்
அஞ்சேலும்என் னீர்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே - 02

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர் படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேஉமக் காட்செய்து வாழலுற்றாற் சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர் பெற்றம் ஏற்றுகந் தீர்சுற்றும் வெண்டலைகொண்
டணிந்தீர்அடி கேள்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே - 03

முன்னம்அடி யேன் அறி யாமையினான் முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை அடி யேன்உமக் காளும்பட்டேன் சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னை அடைந் தார்வினை தீர்ப்பதன்றோ தலையாயவர் தங்கடன் ஆவதுதான்
அன்னநடை யார்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே - 04

காத்தாள்பவா் காவல் இகழ்ந்தமையால் கரைநின்றவா் கண்டுகொள் என்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியீட நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன் வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புனல் ஆர்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே - 05

## மாணிக்கவாசகா் அருளிய

## திருவாசகம்

பாண்டிய நாட்டில் உள்ள திருவாதவூரில் அந்தணா் குலத்தில் பிறந்தவா் மாணிக்கவாசகா். இவரது இயற்பெயா் திருவாதவூரா். இவர் அரிமா்த்தன பாண்டியனிடம் அமைச்சராகப் பணி புரிந்தாா். ஒரு முறை பாண்டியன் இவரிடம் நிறையப் பொன்னைக் கொடுத்துக் குதிரைகள் வாங்கி வருமாறு அனுப்பினான். செல்லும் வழியில் திருப்பெருந்துறையில் இருந்த மரத்தடியில் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்று சிவஞானம் உபதேசிக்கபட்டாா். இதனால் தாம் மேற்கொண்டு வந்த பணியை மறந்தாா். கொணா்ந்த பொன்னைக் கொண்டு கோயில் கட்டுவித்து இறைப்பணியில் ஆழ்ந்தாா். அதனால் சினமுற்ற பாண்டியன் இவரைச் சிறையிலிட்டான் இறைவன் இவர் பொருட்டு நரியைப் பரியாக்கியும் பரியை நரியாக்கியும் சிட்டுக்கு மண் சுமந்தம் சில திருவிளையாடல்களைப் புரிந்து இவரது பெருமையை அரசனும் மற்றோரும் அறியச் செய்தாா். பின்னா் மாணிக்கவாசகா் கருங்கல் மனத்தையும் உருக வைக்கும் பாடல்களை இறைவன் மீது பாடினாா். இறைவன் இவருடைய பாடல்களையெல்லாம் அந்தணா் வடிவத்தில் வந்து பாட்டோலையில் எழுதிக்கொண்டாா் என்ற கூறுவா்.

மாணிக்கவாசகா் பாடிய நூல்கள் திருவாசகமும், திருக்கோவையாரும் ஆகும். இவை எட்டாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. திருவாசகம் சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக 51 பகுதிகளைக் கொண்டது. 659 பாடல்களை உடையது. “திருவாசகத்திற்கு உருவாா் ஒரு வாசகத்திற்கும் உருகாா்” என்ற பழமொழி திருவாசகத்தின் பெருமையை உணா்த்தும்.

## அச்சோப் பதிகம்

முத்திநெறி அறியாத மூா்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தனெனக் கருளியவா றாா்பெறுவாா் அச்சோவே - 01

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்கு
அறியும்வண்ணம் அருளியவா றாா்பெறுவாா் அச்சோவே - 02

பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே - 03

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணல்எனக் கருளியவா றார்வபெறுவார் அச்சோவே - 04

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன்நான் உடையானே அடியேனை வருகஎன்று
அஞ்சேல்என் றருளியவா றார்பெறுவார் அச்சோவே - 05

## திருமூலர் அருளிச்செய்த திருமந்திரம்

## முதல் தந்திரம் - கல்வி

# திருமந்திரம்

பன்னிரு திருமுறையில் பத்தாவது திருமுறையாகத் திகழும் சிறப்புடைய நூல் திருமந்திரம். இது ஒன்பது தந்திரங்களை உடையது. ஒவ்வொரு தந்திரமும் பல அதிகாரங்களைக் கொண்டது. இதில் மொத்தம் 3000 பாடல்கள் உள்ளன. இதனை இயற்றியவர் திருமூலர் நாயன்மார்கள் எல்லோரினும் காலத்தால் முற்பட்டவர் இவரே. இவர் ஒரு பெருஞ்சித்தர். நந்தி தேவரின் மாணவர். திருவாவடுதுறைக் கோயிலில் உள்ள அரசமரத்தடியில் மூவாராயிரம் ஆண்டுகள் யோகத்தில் அமர்ந்திருந்தார் என்றும், ஆண்டுக்கு ஒரு முறை விழித்து ஒவ்வொரு மந்திரமாக 3000 மந்திரங்கள் அருளினார் என்றும் கூறுவர்

திருமந்திரமே முதல் மந்திர நூலாகும். இதுவே பிற்காலச் சைவ சித்தாந்த சாத்திர நூல்களுக்கு வேராக விளங்குகிறது.

“ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்”
“நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்”
“ஆர்க்கும் இடுமின் அவரவர் என்னன்மின்”
“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்”

என்று திருமூலரால் கூறப்படும் உண்மைகள் அனைவரும் கடைப்பிடிப்பதற்குரிய அறிவுரைகளாகும்.

# திருமூலர்

குறிப்பறிந் தேன்உடலோடுயிர் கூடிச்
செறிப்பறிந் தேன்மிகும தேவர் பிரானை

மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்
கறிப்பறி யாமிகுங் கல்விகற் றேனே - 01

கற்றறி வாளர் கருதிய காலத்துக்
கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறி வாளர் கருதி உரைசெய்யுங்
கற்றறி காட்டக் கயலள வாக்குமே - 02

நிற்கின்ற போதே நிலையுடை யான்கழல்
கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்றல் இன்றித் தொழுமின் தொழுதபின்
மற்றொன் றிலாத மணிவிளக் காமே - 03

கல்வி யுடையார் கழிந்தோடிப் போகின்றார்
பல்லி யுடையார் பரம்பரிந் துண்கின்றார்
எல்லியுங் காலையும் ஏத்தும் இறைவனை
வல்லியுள் வாதித்த காயமு மாமே - 04

துணையது வாய்வருந் தூயநற் சோதி
துணையது வாய்வருந் தூயநற் சொல்லாம்
துணையது வாய்வருந் தூயநற் கந்தம்
துணையது வாய்வருந் தூயநற் கல்வியே - 05

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்;
அன்பே சிவமாவதாகும் அறிகிலார்;
அன்பே சிவமாவதாகும் அறிந்தபின்;
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே;

படமாடக் கோயில் பகவற்கொன்று ஈயின்;
நடமாடக் கோயில் நம்பர்க்காங்காகா;
நடமாடக் கோயில் நம்பர்க்கொன்று ஈயின்;
படமாடக் கோயில் பகவற்க தாமே.

மரத்தை மறைத்தது மாமத யானை;
மரத்தின் மறைந்தது மாமத யானை;
பரத்தை மறைத்தது பார் முதற்பூதம்;
பரத்தின் மறைந்தது பார்முதற்பூதம

# அலகு -2

## ஆண்டாள் அருளிய

## நாச்சியார் திருமொழி

பெரியாழ்வார் நந்தவனத்தில் ஆடித்திங்கள் பூச நட்சத்திரத்தில் தோன்றியவள் ஆண்டாள். கோதை என்பது இயற்பெயர். ஆண்டவனையே ஆண்டவள் என்றமையால் ஆண்டாள் என்னும் பெயர் பெற்றார். சூடிக் கொடுத்த சுடர்கொடி என்பது ஆண்டாளின் செயல் கருத்தமைந்த சிறப்புப் பெயர் அரங்கனைக் காதலனாக்கி இவர் பாடிய பாடல்கள் மிகச் சிறப்பானவை. பக்தியிலும் காதல் உணர்வை வெளிப்படுத்தி புரட்சி நோக்குமுடையவர். திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்பன இவருடைய நூல்கள் வைணவர்களிடையே மார்கழி மாதம் முழுவதும் பாடப்படும் திருப்பாவை பாடல்கள் சிறப்பிக்குரியதாகும்.

கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் நித்தித்தி ருக்கும்மோ,
மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே - 1

கடலில் பிறந்து கருதாது, பஞ்சசனன்
உடலில் வளர்ந்து போய் ஊழியான் கைத்தலத்
திடரில் குடியேறித் தீய வசுரர்,
நடலைப் படமுழங்கும் தோற்றத்தாய் நற்சங்கே - 2

தடவரையின் மீதே சாற்கால சந்திரன்
இடையுவா வில்வந்தெ ழுந்தாலே போல் நீயும்
வடமதுரை யார்மன்னன் வாசுதே வன்கையில்
குடியேறி வீற்றிருந்தாய் கோலப் பெருஞ்சங்கெ - 3

சந்திர மண்டலம்போல் தாமோத ரன்கையில்,
அந்தர மொன்றின்றி யேறி யவஞ்செவியில்,
மந்திரம் கொள்வாயெ போலும் வலம்புரியே,
இந்திரனு முன்னோடு செல்வத்துக் கேலானே - 4

உன்னோ டுடனே யொருகடலில் வாழ்வாரை,
இன்னா ரினையாரென் றெண்ணுவா ரில்லைகாண்,
மன்னாகி நின்ற மதுசூதன் வாயமுதம்,
பன்னாளு முண்கின்றாய் பாஞ்சசன் னியமே - 5

# குலசேகர ஆழ்வார்
# அருளிய
# பெருமாள் திருமொழி

திருவஞ்சைக் களத்தில் மாசித்திங்கள் புனர்பூச நட்சத்திரத்தில் மணி அம்சமாகப் பிறந்தவர் குலசேகர ஆழ்வார். அரசாட்சியைத் துறந்து வைணவத் தொண்டரானவர் வடமொழிப் பயிற்சி மிகுந்தவர். இராமாவதாரத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர். திருவேங்கடத்தில் படியாய்க் கிடந்து மகிழ விரும்பியவர். திருவரங்கத்தில் மூன்றாம் மிதவைக் கட்டியவர். தமிழில் பெருமாள் திருமொழியும் வடமொழியில் முகுந்த மாலையும் இவரால் இயற்றப்பெற்றன.

திருமாலிடம் கொண்ட பக்தியால் அவர் எழுந்தருளிய திருத்தலத்தில் மீனாய்ப் பிறக்க விரும்பியவர்.

ஊன் ஏறு செல்வத்து உடற்பிறவி யான் வேண்டேன்
ஆனேறு ஏழ் வென்றான் அடிமைத் திறம் அல்லால்
கூன் ஏறு சங்கம் இடத்தான் தன் வேங்கடத்துக்
கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே - 1

ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற் சூழ
வான் ஆளும் செல்வமும் மண்-அரசும் யான் வேண்டேன்
தேன் ஆர் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதி உடையேன் ஆவேனே - 2

பின் இட்டசடையானும் பிரமனும் இந்திரனும்
துன்னிட்டுப் புகல் அரிய வைகுந்த நீள் வாசல்
மின் வட்டச் சுடர் ஆழி வேங்கடக்கோன் தான் உமிழும்
பொன்-வட்டில் பிடித்து உடனே புகப் பெறுவேன் ஆவேனே - 3

ஒண் பவள வேலை உலவு தன் பாற்கடலுள்
கண் துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்கு
பண் பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துச்
செண்பகமாய் நிற்கும் திரு உடையேன் ஆவேனே - 4

கம்ப மத யானைக் கழுத்தகத்தின்மேல் இருந்து
இன்பு அமரும் செல்வமும் இவ் அரசம் யான் வேண்டேன்
எம்பெருமான் ஈசன் எழில் வேங்ட மலைமேல்
தம்பகமாய் நிற்கும் தவம் உடையேன் ஆவேனே - 5

மின் அனைய நுண்ணிடையார் உருப்பசியும் மேனகையும்
அன்னவர்தம் பாடலொடும் ஆடல் அவை ஆதரியேன்
தென்ன என வண்டினங்கள் பண் பாடும் வேங்கடத்துள்
அன்னனைய பொற்குவடு ஆம் அருந்தவத்தேன் ஆவேனே - 6

வான் ஆளும் மா மதி போல் வெண் குடைக்கீழ் மன்னவர்தம்
கோன் ஆகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வு அறியேன்
தேன் ஆர் பூஞ்சோலைத் திருவேங்கட மலைமேல்
கானாற்ப் பாயும கருத்து உடையேன் ஆவேனே - 7

பிறை ஏறு சடையானும் பிரமனும் இந்திரனும்
முறையாய பெரு வேள்விக் குறை முடிப்பான் மறை ஆனான்
வேறியார் தண் சோலைத் தருவேங்கட மலைமேல்
நெறியாய்க் கிடக்கும் நிலை உடையேன் ஆவேனே - 8

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின் கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே - 9

உம்பர் உலகு ஆண்டு ஒருகுடைக்கீழ் உருப்பசிதன்
அம்பொற் கலை அல்குல் பெற்றாலும் ஆதரியேன்
செம் பவள-வாயான் திருவேங்கடம் என்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே - 10

மன்னிய தண் சாரல் வட வேங்கடத்தான் தன்
பொன் இயலும் சேவடிகள் காண்பான் புரிந்து இறைஞ்சிக்
கொல் நவிலும் கூர்வேற் குலசேகரன் சொன்ன
பன்னிய நூற் தமிழ் -வல்லார் பாங்காய பத்தர்களே - 11

## நம்மாழ்வார்
## அருளிய
## திருவாய்மொழி

ஆழ்வார்களில் தலைமை சான்றவர் நம்மாழ்வார் ஆவார். சைவ சமயத்தில் மாணிக்க வாசகருக்கு இணையாக, வைணவ சமயத்தில் இவரைப் போற்றுவதுண்டு திருக்குருகூர் எனப்படும் ஆழ்வார் திருநகரியில் பிறந்தவர் அரங்கப் பெருமானால் 'நம் சடகோபன்' என்று அழைக்கப்பட்டமையாலும் எல்லோர்க்கும் உரியவராக இருப்பதாலும் நம்மாழ்வார் என்ற பெயர் பெற்றார். சடகோபன், பராங்குசன், தமிழ்மாறன் முதலிய வேறு பெயர்களும் இவருக்கு உண்டு.

இவர் பாடிய திருவாய்மொழி 'திராவிட வேதம்' என்ற சிறப்பினைப் பெற்றது. இவருடைய நான்கு நூல்களும் வைண சமயத்தார்குரிய மறைகளாகப் போற்றப்படுகின்றன.

எல்லாப் பொருள்களையும் இறைவனாகக் காணும் ஆழ்ந்த உள்ளம் உடையவராக நம்மாழ்வார் விளங்குகிறார். 'உண்ணும் சோறும், படுகும் நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமானே என்று எங்கும் எதிலும் கண்ணனைக் காணுகிறார்.

எல்லாவற்றிலும் இறைவனை நினைந்து உள்ளம் கசிந்து பரும் இவருடைய பாடல்கள் உள்ளத்தை நெகிழச் செய்வன.

உயர்வு அற உயர் நலம் உடையவன் எவன்? அவன்
மயர்வு அற மதி நலம் அருளினன் எவன்? அவன்
அயர்வு அறும் அமரர்கள் அதிபதி எவன்? அவன்
துயர் அறு சுடர் அடி தொழுது எழு என் மனனே - 1

மனன் அகம் மலம் அற மலர்மிசை எழுதரும்
மனன் உணர்வு அளவு இலன் பொறி உணர்வு அவை இலன்
இனன் உணர் முழு நலம் எதிர் நிகழ் கழிவினும்
இனன் இலன் எனன் உயிர்மிகுநரை இலனே - 2

இலன் அது உடையன் இது என நினைவு அரியவன்
நிலனிடை விசும்பிடை உருவினன் அருவினன்
புலனொடு புலன் அலன் ஒழிவு இலன் பரந்த அந்
நலன் உடை ஒருவனை நணுகினம் நாமே - 3

நாம் அவன் இவன் உவன் அவள் இவள் உவள் எவள்
தாம் அவர் இவர் உவர் அது இது உது எது
வீம் அவை இவை உவை அவை நலம் தீங்கு அவை
ஆம் அவை ஆயவை ஆய்நின்ற அவரே - 4

அவரவர் தமதமது அறிவு அறி வகைவகை
அவரவர் இறையவர் என அடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவு இலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே - 5

## அலகு -3

### பலபட்டடை சொக்கநாதப்புலவர்
### அழகர் கிள்ளை விடு தூது

இந்நூலின் ஆசிரியர் பலப்பட்டைச் சொக்கநாதப்புலவர். இவர் 17-ஆம் நூற்றாண்டினர். மதுரை மாநகரைச் சார்ந்தவர். தந்தை பெயர் சொக்கலிங்கம் பிள்ளை இவரது சமயம் சைவம். இவர் இயற்றிய நூல்கள் மதுரையைப் பற்றிய மும்மணிக் கோவை, யகம, அந்தாதி, இராமேசுவரம்பற்றிய தேவை உலா, திண்டுக்கல் பதம்கிரிநாதர் மீது தென்றல்விடு, தூது, கன்னிவாடி நரசிங்க நாயகர் பற்றிய வளமடல் ஆகியன.

தூது என்பது சிற்றிலக்கியங்களுள் ஒன்று. தூது நூல்கள் தெய்வங்கள் அல்லது வள்ளலிடத்து பாணன், விறலி போன்ற உயர்திணையோரையும், கிளி, வண்டு, மேகம் போன்ற அஃறிணைப் பொருள்களையும் தூது விடுத்துப் பாடுவதாகும். பாட்டியல் நூல்கள் இத்தகு சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் கூறுகின்றன.

துலைவி ஒருத்தி பழமுதிர்சோலையில் அருள்பாலிக்கும் அழகராகிய திருமாலின் பேரழைக் கண்டு காதல் கொண்டாள். தன் காதலை எப்படி வெளிப்படுத்துவது என்று தெரியவில்லை. தான் வளர்த்த கிளிளைத் தூதாக அனுப்புகின்றாள். அதனைப் பெருமைப்படுத்திப் பேசித் தூது அனுப்புவது சிறப்பாக அமைந்துள்ளது.

**கிளியின் சிறப்புகள்**

கார்கொண்டமேனிக் கடவுள் பெயர்கொண்டு
நீர்கொண்டபாயல் நிறம்கொண்டு - சீர்கொண்ட

வையம் படைக்கும் மதனையும் மேல் கொண்டுஇன்பம்
செய்யுங் கிளியரசேசெப்பக்கேள் - வையம்எலாம்

வேளாண்மைஎன்னும் விளைவுக்குநின்வார்த்தை
கேளாதவர் ஆர்காண் கிள்ளையே - நாளும்

மலைத்திடும் மாரன் ஒற்றைவண்டிலும் இல்லாமல்
செலுத்தியகால்தேரைமுழுத்தேராய்ப் - பெலத்து,ழுத்துக்

கொண்டுதிரிபச்சைக் குதிராய் உனக்குஎதிரோ
பண்டுதிரிவெய்யோன் பரிஏழும் - கண்ட

செகமுழுதும் நீஞானதீபமும் நீஎன்று
சுகமுனியேசொல்லாரோசொல்லாய் - வகைவகையாய்

எவ்வண்ணமாய்ப் பறக்கும் எப்பறவைஆயினும்உன்
ஐவண்ணத்துள்ளேஅடங்குமே - மெய்வண்ணம்

பார்க்கும்பொழுதில் உனைப் பார்ப்பதிஎன்பார் என்றோ
மூக்குச் சிவந்தாய் மொழிந்திடாய் - நாக்குத்

தடுமாறுவோரைஎல்லாம் தள்ளுவரேஉன்னை
விடுவார் ஒருவர் உண்டோவிள்ளாய் - அடுபோர்

மறம்தருசீவகனார் மங்கையரில் தத்தை
சிறந்ததுநின் பேர்படைத்தசீரே - பிறந்தவர்

ஆரும் பறவைகளுக்குஅச்சுதன் பேரும் சிவன்தன்
பேரும் பகர்ந்தால் பிழைஅன்றோ - நேர்பெறுவி

வேகிஒருகூடுவிட்டு மறு கூடுஅடையும்
யோகிஉனக்குஉவமைஉண்டோகாண் - நீகீரம்

ஆகையால் ஆடை உனக்குஉண்டேபாடகமும்
நீகொள்வாய் கால் ஆழி நீங்காயே - ஏகாத

கற்புடையாய் நீஎன்றால் காமனையும் சேர்வாயே
அற்புடையபெண்கொடிநீஆகாயோ - பொற்புடையோர்

துன்னியசாயுச்யம் சுகரூபம் ஆகையால்
அன்னதுநின்சொரூபம் அல்லவோ - வன்னி

பரிசித்தஎல்லாம் பரிசுத்தம் என்றோ
உருசித்தஉன்எச்சில் உண்பார் - துரிசுஅற்றோர்

இன்சொல்லைக் கற்பார் எவர்சொல்லும் நீகற்பாய்
உன்சொல்லைக் கற்கவல்லார் உண்டோகாண் - நின்போலத்

தள்ளரியயோகங்கள் சாதியாதேபச்சைப்
பிள்ளையாய் வாழும் பெரியோர்யார் - உள்உணர்ந்த

மாலினைப் போலமகிதலத்தோர் வாட்டம்அறப்
பாலனத்தாலேபசிதீர்ப்பாய் - மேல் இனத்தோர்

நட்டார் எனினும் நடந்துவரும் பூசைதனை
விட்டார் முகத்தில் விழித்திடாய் - வெட்டும்இரு

வாள்அனையகண்ணார் வளர்க்கவளர்வாய் உறவில்
லாளனைநீகண்டால் அகன்றிடுவாய் - கேளாய்

இருவடிவுகொண்டமையால் எங்கள் பெரிய
திருவடிகள் வீறுஎல்லாம் சேர்வாய் - குருவாய்ச்

செபதேசிகர்க்குஎல்லாம் தென்அரங்கர் நாமம்
உபதேசமாகஉரைப்பாய் - இபமுலையார்

சித்தம் களிகூரச் செவ்விதழில் ஆடவர்போல்
முத்தம் கொடுக்கமுகம் கோணாய் - நித்தம் அவர்

செவ்விதழ்உன் மூக்கால் சிவந்ததோ உன்மூக்கில்
அவ்விதழின் சிவப்புஉண்டானதோ - செவ்விஇழந்து

அண்டருக்குத் தோற்றான் அடல்வேள் ஆநானைநீ
கொண்டு,ழுத்தால் ஆகும் குறைஉண்டோ - உண்டாக்கி

ஆயுவைநீட்டஅருந்தவத்தோர் பூரகம்செய்
வாயுவைஉன் பின்னேவரவழைப்பாய் - தேயசுஒளிர்

மைப்பிடிக்கும் வேல்கண் மலர்மாதும் சங்கரியும்
கைப்பிடிக்கநீவங்கணம் பிடித்தாய் - மெய்ப்பிடிக்கும்

பச்சைநிறம் அச்சுதற்கும் பார்ப்பதிக்கும் மூன்றனக்கும்
,ச்சைபெறவந்தவிதம் எந்தவிதம் - மெச்சும்

குருகே உன் நாக்குத்தான் கூழைநாக்குஆனது
அரிகீர்த்தனத்தினால் அன்றோ - தெரிவையர்கள்

ஆர்த்தவிரல் உன்முகம் ஒப்பாகையாலேகையைப்
பார்த்துமுகம்அதனைப் பார்என்பார் - சீர்த்திக்

கிரிகையிலேகாணுங்கால் கிள்ளைஅடையாத
பெரியதனம் வீண்அன்றோபேசாய் - தெரியும்கால்

தேறுகனிகாவேரிசிந்துகோதாவிரியும்
வீறுபெறுமேநீவிரும்பினால் - கூறில் அனம்

உன்னுடையஊண்அன்றோஊதப் பறந்துபோம்
சின்னவடிவன்றோசெழும்குயிலும் - என்னே

முதுவண்டு,னந்தான் முடிச்சுஅவிழ்த்தாலும்
மதுஉண்டாற் பின்னைவாயுண்டோ - எதிரும்

கரும்புறாவார்த்தைகசப்பென்றுசொல்ல
வரும் புறாவுக்கும் ஒருவாயோ - விரும்புமயில்

உற்றபிணிமுகமேஉன்போல் சுகரூபம்
பெற்றபறவைபிறவுண்டோ - கற்றுஅறியும்

கல்வியும் கேள்வியும் நீகைக்கொண்டாய் சாரிகைக்குள்
செல்வம் அதில் அள்ளித் தெளித்தாயோ - சொல் வேதம்

என் பரிநாலுக்கும் விதிசாரதிவில்வேள்
தன் பரியேஉனக்குச் சாரதியார் - வன்போரில்

மேவுஞ் சிவன் விழியால் வேள்கருகிநாண்கருகிக்
கூவும் பெரியகுயில்கருகிப் - பாவம்போல்

நின்றுமறுப்பாடுநாள் நீதானநடுப்படையில்
சென்றுமறுப்படாதேவந்தாய் - என்றுமாக்

காய்க்கும் கனிஅல்லால் காய்பூ என்றால் நாக்கும்
மூக்குமறுப்பாய் முகம் பாராய் - ஆக்கம்

வரையாமல் நன்மைவரத்தினைநல்கும்
அரிதாளைநீவிட்டுஅகலாய் - இருகை

உனக்கு இல்லைஉன்சிறகு,ரண்டும் எனக்கில்லை
எனக்கும் உனக்கும் பேதம் ஈதே - மனைக்குள்

இதமாய் மனிதருடையனேபழகுவாய் அன்பு
அதனால் முறையிட்டுஅழைப்பாய் - மது உண்டு

அளிப்பிள்ளைவாய்குழறும் ஆம்பரத்தில்ரேறிக்
களிப்பிள்ளைப் பூங்குயிலும் கத்தும் - கிளிப்பிள்ளை

சொன்னத்தைச் சொல்லுமென்றுசொல்லப் பெயர் கொண்டாய்
பின் அத்தைப் போலும் ஒருபேறுண்டோ - அன்னம் ,ன்றிப்

பால்குடிக்கும் பச்சைக் குழந்தைநீஆனாலும்
கால்பிடிப்பார் கோடிபேர் கண்டாயே - மால்பிடித்தோர்

கைச்சிலைவேளால் வருந்தும் காமநோய் தீர்ப்பதற்கோ
பச்சிலைரூபம் படைத்துஇருந்தாய் - அச்ச

மனப் பேதையார் மால்வனம் சுடவோவன்னி
எனப் பேர் படைத்தாய் இயம்பாய் - அனத்தை

நிலவோஎன்பார்கள் நெடுந்துயர் வேழத்தைக்
கொலவோவரிவடிவம் கொண்டாய் - சிலைநுதலார்

கொள்ளைவிரகக் கொடும்படையைவெல்லவோ
கிள்ளைவடிவுஎடுத்தாய் கிற்பாய் நீ - உள்ளம்

மிகஉடைமாதர் விதனம் கெடவோ
சுகவடிவுநீகொண்டாய் சொல்லாய் - தகவுஉடைய

தத்தைஅடைந்தவர் ஏதத்தைஅடையார் என்னும்
வித்தைஅடைந்தாய் உனையார் மெச்சவல்லார் - முத்தமிழோர்

மாரதிபாரதியார்க்குஉன்னைஉவமானிப்பார்
ஆர்அதிகம் ஆர்தாழ்வுஅறைந்திடாய் - ஊர்அறிய

நெய்யில் கை,ட்டாலும் நீதான் பசுமையென்றே
கையிட்டுச் சுத்திகரிக்கலாம் - மெய்யின்

வடிவும் வளைந்தமணிமூக்கும் மாயன்
கோடியில் இருப்பவர் தம் கூறோ - நெடியமால்

விண்டுதறித்து ஊது வேணுகானத்தினிலே
பண்டுதழைத்தபசுந்தழையோ - கொண்டசிறகு

அல்இலங்குமெய்யானைஅன்றுஅழித்துவீடணன் போய்த்
தொல் இலங்கைகட்டுபுதுத்தோரணமோ - நல்வாய்

மழலைமொழிதான் மணிவண்ணன் செங்கைக்
குழலின் இசைதானோ கூறாய் - அழகுக்

கிளிப்பிள்ளாய் தெள்ளமுதக் கிள்ளாய் நலங்குக்
குளிப்பிள்ளாய் இன்பரசக் குஞ்சே - வளிப்பிள்ளை

தன்னைத் தாய் போல் எடுத்துச் சஞ்சரிக்கும் சம்பத்தாய்
பின்னைத்தாய் கையில்உறைபெண் தத்தாய் - பொன்ஒத்தாய்

முத்திநகர் ஏழில்ஒன்றேமுத்தமிழ் வல்லாறில் ஒன்றாய்
ஒத்ததனித் தவ்வரிப் பேர் உற்றதுஒன்றேசுத்தம் உறும்

ஐந்துபூதத்தில் ஒன்றேஆனபடைநான்கில் ஒன்றே
முந்துமுதலானபொருள் மூன்றில் ஒன்றே - வந்த

இரு பயனில் ஒன்றே,மையேவிழியே
பருவவிழியில் உறைபாவாய் - ஒருநாரில்

ஏற்றும் திருமலைஎய்தப்போய் ஊரெல்லாம்
தூற்றுமலர் கொண்டகதைசொல்லக்கேள் - தோற்றி

.

## கலிங்கத்துப்பரணி

### செயங்கொண்டார்

“ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மான வனுக்கு வகுப்பது பரணி”

என இலக்கண விளக்கப் பாட்டியல் பரணிக்கு இலக்கணம் கூறுகின்றது. வெற்றியின் தெய்வம் கொற்றவை. அவள் பிறந்த நட்சத்திரம் பரணி. ‘பரணியுடையான் தரணி ஆள்வான்’ என்னும் கூற்றிக்கேற்ப பரணி நட்சத்திரத்தில் பிறந்த யாவரும் வெற்றித் திலகங்களாகத் திகழ்வது இயல்பு என்பர். இப்பரணி இலக்கியம் விண், மண் நரகம், மூன்றினையும் இணைத்துக் கூறும் இயல்புடையது. பரணி நூல்களுள் சிறந்தது செயங்கொண்டார் என்பவரால் கி.பி.12 ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்ற கலிங்கத்துப்பரணி ஆகும். வெற்றி வீரர்களைச் சிறப்பிப்பதே பரணியின் நோக்கு என்றாலும் தோல்வியடைந்தாரைச் சார்ந்தே நூலுக்குப் பெயரிடப்படும் முறை பின்பற்றப்பட்டது. கலிங்கத்துப்பரணி என்பது தோல்வியடைந்த கலிங்க மன்னன் பெயரால் அமைந்தது. கடைதிறப்பு என்பது

போருக்குச் சென்று வெற்றி பெற்ற வீரர்கள் இல்லம் திரும்பக் காலம் அதிகம் ஆனதால் கோபம் கொண்டு பெண்கள் வீட்டின் கதவை அடைத்துவிடுவது போன்றும் கதவைத் திறக்கச் சொல்லி கணவன்மார்கள் கூறுவது போன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

## கலிங்கத்துப்பரணி (கடைத்திறப்பு)

கல்விக் களியின் மயக்கத்தாற்
கலைபோய் அகலக் கலைமதியின்
நிலவைத் துகிலென் றெடுத்துடுப்பீர்!
நீள்பொற் கபாடந் திறமினோ! (1)

இலங்கை எறிந்த கருணா கரனதன்
இகல்வெஞ் சிலையின் வலிகேட்பீர்!
கலிங்கம் எறிந்த கருணாகரன் தன்
களப்போர் பாடத் திறமினோ! (2)

பேணும் கொழுநர் பிழைகளெலாம்
பிரிந்தபொழுது நினைந்து அவரைக்
காணும்பொழுது மறந்திருப்பீர்!
கனப்பொன் கபாடம் திறமினோ! (3)

'வருவார் கொழுநர்' எனத்திறந்தும்
'வாரார் கொழுநர்' என அடைத்தும்
திருகும் குடுமி விடியளவும்
தேயும் கபாடம் திறமினோ! (4)

செக்கச் சிவந்த கழுநீரும்
செகத்தில் இளைஞர் ஆருயிரும்
ஒக்கச்செருகும் குழல்மடவீர்
உம்பொன் கபாடம் திறமினோ (5)

## முக்கூடற்பள்ளு

### ஏசல்

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் கி.பி.17, 18 ஆம் நூற்றாண்டுகளில் சில புதிய மாற்றங்கள் ஏற்பட்டன. வாய்மொழி இலக்கியப் பண்புகள் சங்க இலக்கியங்களிருந்தே தொடர்ந்து எட்டிலக்கியத்தில் காணப் பெற்றாலும். இக்காலத்தில் கிராமப்புற மக்களின் வாழ்க்கையொட்டிக் குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகங்கள் போன்றவை தோன்றின.

பாமர மக்களின் மண்மணம் கமழும் இந்நூல்களில் அவர்தம் வாழ்க்கை இயல்புகளை நாம் நன்கறியலாம். அவ்வகையில் முக்கூடற்பள்ளு என்பது பள்ளு இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்கதோர் உருவாக்கமாகும்.

உழத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட பள்ளர்களின் வாழ்வையொட்டித் தோன்றிய முக்கூடற்பள்ளு என்னும் நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரிந்திலது என்னும், இதனை நாடக நூலாக்கியவர் என்னயினாப் புலவர் என்று கூறுவர். இசையுடன் பாடுதற்கேற்ப பாடல்கள் பலவற்றைப் பெற்றுள்ள இப்பள்ளு நூலிலிருந்து சில பாடல்கள் அறிமுகப்படுத்தப் பெறுகின்றன.

வழக்கிட்டுநான் வந்தேனோ?
மருதூர்ப்பள்ளி! பள்ளன்
மாமன் மகளென்றென்னை
மறித்துக் கொண்டான்;
உழக்கிற் கிழக்கு மேற்கோ?
முக்கூடற்பள்ளி! மறித்து
உன்னைக் கொண்டான். என்னக் கண்டென்
ஊரிலே வந்தான் (1)

மந்திரமும் தந்திரமும்
மருதூர்ப்பள்ளி! உன்போல்
வகைவந்தால் பள்ளனுமென்
வசமாகானோ?
சந்தியில் மாங்கொட்டை போடி
முக்கூடற்பள்ளி! நீயும்
சாரங்கெட்ட மருந்தென்றோ
சாதிக்க வாராய் (2)

சாதிப்பது னக்கு வரும்
மருதூர்ப்பள்ளி! நரி
தான்பரியாய்ச் சாதித்தான் உங்கள்
சம்புவல்லோடி!
பேதிக்கச் சாதிக்க வாராய்
முக்கூடற்பள்ளி! கல்லைப்
பெண்ணாகச் சாதித்தான் உங்கள்
கண்ணனல் லோடி! (3)

மாதொருத்திருக்கு ஆசைப்பட்டுப்
பொன்னின் மயமாய் - பனி
மலையேறிப் போனானுங்கள்
மத்தனல்லோடி?

காதலித்துத் தம்பியுடன்
சீதைபொருட்டால் - அன்று
கடலேறிப் போனானுங்கள்
கண்ணனல்லோடி? (4)

தான்பசுப்போல் நின்று கன்றைத்
தேர்க்காலில் விட்டே சோழன்
தன்மகனைக் கொன்றானுங்கள்
தாணுவல்லோடி?
வான்பழிக்குளாய்த் தவசி
போல மறைந்தே நின்று
வாலியைக் கொன்றானுங்கள்
மாயனல்லோடி? (5)

வலிய வழக்குப் பேசிச்
சுந்தரன் வாயால் - அன்று
வையக்கேட்டு நின்றானுங்கள்
ஐயனல்லோடி?
புலிபோல் எழுந்துசிவ
பாலன் வையவோ ஏழை
போல நின்றான் உங்கள் நெடு
நீலனல்லவோ? (6)

சுற்றிக்கட்ட நாலுமுழத்
துண்டுமில்லாமல் - புலித்
தோலை யுடுத்தானுங்கள்
சோதியல்லோடி?
கற்றைச்சடை கட்டிமர
வுரியஞ்சோலைதான் -பண்டு
கட்டிக் கொண்டா னுங்கள் சங்குக்
கையனல்லோடி? (7)

நாட்டுக்குள் இரந்தும் பசிக்
காற்றமாட்டாமல் - வாரி
நஞ்சையெல்லாம் உண்டானுங்கள்
நாதனல்லோடி?
மாட்டுப் பிறகே திரிந்துஞ்
சோற்றுக்கில்லாமல் - வெறும்
மண்ணையுண்டா னுங்கள்முகில்
வண்ணனல்லோடி? (8)

ஏறஒரு வாகனமும்
இல்லாமையினால் -மாட்டில்
ஏறியே திரிந்தானுங்கள்
ஈசனல்லோடி?
வீறுசொன்ன தென்னமாடு
தானுமில்லாமல் - பட்சி
மீதிலேறிக் கொண்டானுங்கள்
கீதனல்லோடி? (9)

பெருமாள் அடியானுக்குப்
பெண்டிருந்துமே எங்கள்
பெருமானை நீபழித்துப்
பேசலாமோடி?
திருமால் அடிமை என்றாய்
சாலப்பசித்தால் - ஆருந்
தின்னாததுண்டோ சினத்தால்
சொல்லாததுண்டோ? (10)

சொன்னாலென்ன நீயும்பொறு
நானும் பொறுத்தேன் - கிளை
சூழ்ந்திருக்க நாமே கூடி
வாழ்ந்திருக்கலாம்!
பன்னகத் திலாடிய முக்
கூடலழகர் - திருப்
பாதமலர் வாழ்த்தியாடிப்
பாடுவோமே. (11)

## இயேசு காவியம் - கண்ணதாசன்

கவியரசு என்று போற்றப்படுகின்ற இவரது இயற்பெயர் முத்தையா என்பதாகும். தடுமாறும் போதையிலும் கவிபாடும் மேதை அர்த்தமுள்ள இந்துமதம் என்ற உரைநடைநூல் படைத்தார். அது இந்து மதத்தின் புனித நூலான பகவத் கீதையைத் தழுவியதாகும். இயேசு காவியம் என்ற நூல் கவிஞர் கைவண்ணத்தால் மிளிர்ந்த இறவாப் புகழ்கொண்ட காவியமாகும். அது கிறிஸ்துவ திருமறையான விவிலிய நூலின் எளிமைப்படுத்தப்பட்ட காவியமாகும். இவர் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை எழுதியுள்ளார். புதிய

ஏற்பாட்டில் இயேசு பெருமான் கூறிய மனம் மாறிய மைந்தன் கதையே இங்கு கவிஞரின் கைவண்ணத்தில் ஊதாரிப்பிள்ளையாக மிளிர்கிறது.

**ஊதாரிப்பிள்ளை**

ஒரு தந்தை இருமக்கள் ஊர்முழுவதும் சொத்து
ஒரு பிள்ளை அவர்களிலே மணியான முத்து!
சிறுபையன் ஊதாரி தேறாத நெத்து
தீராத மழையினிலே கறையேறும் வித்து!
தன்பாகம் வேண்டுமெனத் தந்தையிடம் கேட்டான்
தந்தைஅவன் மொழிகேட்டு சரிபாதி தந்தான்!
தந்தானே யல்லாது தாளாது துடித்தான்
தன்பிள்ளை வாழட்டும் என்றே தான் கொடுத்தான்!
குருட்டுமகன் தன்சொத்தைக் குறைந்தவிலை விற்றுக்
கொண்டோடி வெளிநாட்டில் கும்மாள மிட்டான்!
பொருட்பெண்டீர் மதுவென்று போனவழி சென்று
பொருள்தேய்ந்து புகழ்தேய்ந்து தெருவினிலே நின்றான்!
அந்நாட்டில் பெரும்பஞ்சம் அவ்வேளை சூழ
அறியாத இளமைந்தன் அலைந்தானே வாழ!
தன்னாட்டு மனிதனிடம் ஒருவேலை தேட
தந்தானே ஒருவேலை பன்றிகளோ டாட!
பன்றிக்குத் தருகின்ற உணவே தான் உணவு
பாவிக்கு நாளெல்லாம் தந்தையவன் கனவு!
அந்நேரம் தெளிந்ததுகாண் அவனுடைய அறிவு
அப்பாவின் கால்களிலே விழுகின்ற நினைவு!
என்தந்தாய் வானுக்கும் உமக்குமெதி ரானேன்
எத்தனையோ ஊழியர்கள் இங்கிருக்கப் போனேன்!
உன்வீட்டுக் கூலிகளில் ஒருவனென ஏற்பாய்
உன்பிள்ளை என்றுசொலத் தகுதியில்லை காப்பாய்!
இப்படிப்போய் விழவேண்டும் என்றெண்ணிச் சென்றான்
எதிர்பார்த்துக் காத்திருந்த தந்தையின் முன் நின்றான்!
‘அப்பாஎன் மகனே’ என் றணைத்தானே தந்தை
அன்பான தந்தையின்முன் அழுததவன் சிந்தை!
‘எப்பொது வருவாயென் றெண்ணியிருந் தேனே
இளைத்தாயே என்மகனே கண்மணியே தேனே
தப்பான் பிள்ளையல்ல எதுவும்சொல் லாதே
சந்தர்ப்பம் செய்தசதி வருவாய் இப்போதே
‘யாரங்கே பணியாள்வா, பட்டாடை நகைகள்
அத்தனையும் அணியுங்கள் அலங்கார வகைகள்!
பேர்சொல்லும் மகனுக்கு பெருங்கன்றின் கறிகள்

பிழையாமல் செய்யுங்கள் விரைவில்’ எனச் சொன்னான்!
மாலையிலே மூத்தமகன்மனைக்கு வரும்போது
மனையினிலே சங்கீதம் நடனவகை நூறு!
சாலையிலே நின்றபடி ‘ஏன் சத்தம்?’ என்றான்
‘தம்பிஇன்று வந்துள்ளார்’ என்றொருவன் சொன்னான்!
ஆத்திரத்தில் வெளிப்புறமே மூத்தமகன் நின்றான்
அப்போது தந்தையவன் அந்தஇடம் வந்தான்!
“சாத்திரத்தை மறந்தவனைத் தடபுடலாய் ஏற்றீர்
சாப்பாடு நடனமென ஏற்றுகிறீர் போற்றி!
“உங்களுடன் இருந்தவரை நானென்ன கண்டேன்
ஒருநாளும் எனக்கென்று விருந்துவகை உண்டா?”
கண்கலங்கி மூத்தமகன் இவ்வாறு சொல்ல
கனிவோடு தந்தையவன் மறுவார்த்தை சொன்னான்:
“என்னோடு என்றும்நீ இருப்பவனே யன்றோ
என்செல்வம் எந்நாளும் உன்னுடைய தன்றோ
உன்தம்பி இறந்ததன்பின் உயிர்பெற்று வந்தான்
உண்மையிலே மறுபிறவி அதற்காகச் செய்தேன.

## இ. மஸ்தான் சாகிபு பாடல்கள்

குணங்குடி மஸ்தான் சாகிபு

இராமநாதபுரம் மாவட்டம் குணங்குடியில் பிறந்தவர், தந்தையார் செய்யது நயினார் முகம்மது. சுல்தான் அப்துல் காதிறு லெப்பை ஆலிம் என்பது இவருடைய இயற்பெயர். மஸ்தான் என்பதற்கு ஞானி எனப்பொருள். தமிழிலும் அரசு மொழியிலும் மிக்க புலமை பெற்றவர். அத்தர் வாணிகம் செய்தவர். திருமணத்தன்றே மனைவியாக வரவிருந்த பெண்ணை விடுத்துச் சென்று, துறவறம் மேற்கொண்டார். துறவியாகிச் சென்னை இராயபுரத்தில் வாழ்ந்த இவர், அற்புதங்கள் பல நிகழ்த்தினார்.

இவருடைய பாடல்கள் மஸ்தான் சாகிபு பாடல்கள் என அழைக்கப்படுகின்றன. தாயுமானவர் பாடல்களைப் போன்று இவர் பாடல்கள் இருப்பதால், இஸ்லாமியத் தாயுமானவர் எனப்போற்றப்படுகிறார். இவர் பாடல்களைத் தொகுத்தவர் சீயமங்கலம் அருணாசல முதலியார் ஆவார். இவர் பாடிய பராபரக்கண்ணி நமக்குப் பாடமாக இடம் பெற்றுள்ளது.

## பராபரக்கண்ணி

அண்ட புவனமென்றும் ஆடுதிருக் கூத்தினையான் 1
கண்டு மகிழ்ந்திடவே காட்டாய் பராபரமே.

ஆதியாய் ஆண்டவனாய் அ.்.ததுவாய் நின்றபெருஞ் 2
சோதியாய் நின்மலமாய்ச் சூழ்ந்தாய் பராமரமே

வேத மறைப்பொருளை வேதாந்தந்து உட்கருவை 3
ஓதி உனையறிந்தார் உண்டோ பராபரமே

அண்ட புவனமுடன் ஆகாச மென்று உசும்பிக் 4
கொண்டாடும் மெய்ஞ்ஞானக் கூத்தே பராபரமே.

நாவாற் புகழ்க்கெட்டா நாயகனே நாதாந்தம் 5
பூவாய் மலர்ந்திருக்கப் பூத்தாய் பராபரமே

பேரால் பெரிய பெரும்பொருளே பேதைதனக்கு 6
ஆரா ரிருந்தும்பலன் ஆமோ பராபரமே.

மாராய நற்கருணை மாவருள்சித் தித்திடவே 7
பாராயோ ஐயா பகராய் பராபரமே.

ஆனாலு முன்பாதம் யாசித்து இருப்பதற்குத் 8
தானாய் இரங்கியருள் தாராய் பராபரமே.

நாதாந்த மூல நடுவீட்டுக்குள் இருக்கும் 9
மாதவத்தோர்க்கு ஆன மருவே பராபரமே

உடலுக்கு உயிரேஎன் உள்ளமே உன்பதத்தைக் 10
கடலுமலை யும்திரிந்தும் காணேன் பராபரமே.

மாந்திரத்துக்கு எட்டா மறைப்பொருளே மன்னுயிரே 11
சேர்ந்தஎழு தோற்றத்தின் சித்தே பராபரமே.

தனியேனுக்கு ஆதரவு தாரணியில் இல்லாமல் 12
அநியாயம் ஆவது எனக்கு அழகோ பராபரமே

ஓடித் திரிந்து அலைந்தும் உன்பாதம் காணாமல் 13
வாடிக் கலங்குகிறேன் வாராய் பராபரமே.

தூராதி தூரம் தொலைத்துமதில் உன்பாதம் 14
பாராத பாவத்தில் பயந்தேன் பராபரமே.

தேடக் கிடையாத திரவியமே தேன்கடலே 15
ஈடுனக்கும் உண்டோ இறையே பராபரமே.

அரிய பெரும்பொருளே அன்பாய் ஒருவார்த்தை 16
பரிபூ ரணமாய்ப் பகராய் பராபரமே.

எப்பொழுதும் உன்பதத்தில் என்கருத்தே எய்துதற்கு 17
இப்பொழுதே கைப்பிடித்தாள் இறையே பராபரமே

வாதுக்கு அடரவரும் வம்பரைப்போல் தோசிமனம் 18
ஏதுக்கு அடர்வதுயான் எளியேன் பராபரமே

கண்ணே மனோன்மணியே கண்பார்வைக் கெட்டாத 19
விண்ணடங்கா வெட்ட வெளியே பராபரமே

அடக்கஅரி தாம்மாய ஐம்பொறியைக் கட்டிப் 20
படிக்கப் படிப்பெனக்குப் பகராய் பராபரமே

எத்தவங்கள் செய்தாலும் இன்பமுடன் உன்பதத்தை 21
முத்த ரொருபோது முற்றார் பராபரமே

சொல்லுக்கு இணங்காத சூத்திரத்தைப் பார்த்திருக்க 22
அல்லும் பகலும் எனக்கு ஆசை பராபரமே

எத்தவங்கள் செய்தாலும் இன்பமுடன் உன்பதத்தை 23
முத்த ரொருபோது முற்றார் பராபரமே

சொல்லுக்கு இணங்காத சூத்திரத்தைப் பார்த்திருக்க 24
அல்லும் பகலும் எனக்கு ஆசை பராபரமே

நாற்றாச் சடலமதை நம்பார் முகர்ந்திருக்க 25
பூத்து மலர்ந்திருக்கும் பூவே பராபரமே.

சோற்றுப் பொதியைச் சுமந்தே திரிந்தலைந்தே 26
ஆற்றாமல் நின்றுகளைத்து அழுதேன் பராபரமே

காற்றுத் துருத்திதனைக் கல்லாய் அணைந்திருக்கச் 27
சூத்திரமாய் நின்றாய் சுழியே பராபரமே

கோலத் திருவடிவு கோதையர்கள் ஆசையினால் 28
ஆலைக் கரும்புபோல் ஆனேன் பராபரமே

கேளாயோ என்கவலை கேட்டு இரங்கி யேஎன்னை 29
ஆளாயோ ஐயாபாழ் ஆனேன் பராபரமே

எத்தனைதான் குற்றம் எதிர்த்தடிமை செய்தாலும் 30
அத்தனையும் நீபொறுப்பது அழகே பராபரமே

அல்லல் வினையால் அறிவுகெட்ட ஆன்மாவாய் 31
நெல்லும் பதரும்என நின்றேன் பராபரமே

சொல்லரிய ஞானச் சுடரே ஒருவார்த்தைச் 32
செல்வம் பொழிந்திடநீ செப்பாய் பராபரமே

நித்தம் உனைத்தொழா நிர்மூட னாய்இருக்கும் 33
பித்தனாய் ஏன்காண் பிறந்தேன் பராபரமே

உற்றார்க ளாலும் உறவின்முறை யோராலும் 34
பெற்றார்க ளாலும் உனைப் பிரிந்தேன் பராபரமே

ஏழை முகம்பார்த்து எளியேனை எப்பொழுதும் 35
ஆழாம லாண்டருள்என் அழகே பராபரமே

பாவ உடலெடுத்துப் பாதகனாள் யான்பிறந்துள் 36
ஆவி கெடுவதுஉனக் கழகோ பராபரமே

வாராயோ என்னிடத்தில் வந்தொருக்கால் என்றன்முகம் 37
பாராயோ சற்றே பகராய் பராபரமே

பார்க்கப் பலவிதமாய்ப் பல்லுயிருக் குள்ளிருந்தும் 38
ஆர்க்குந் தெரியாமல் ஆனாய் பராபரமே

ஆனாலும் பொல்லாத அரும்பாவி ஆகவுடல் 39
ஏனோ எடுத்தேன்நான் எந்தாய் பராபரமே

கர்ப்பூர தீபக் கனலொளிபோல் காட்சிதர 40
முப்பாழும் பாழாய் முடித்தாள் பராபரமே

## பட்டினத்தடிகள்

பட்டினத்தார் என்றும் பட்டினத்தடிகள் என்று கூறப்படுபவர் சோழர்கள் காலத்தில் கி.பி.11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த துறவி இவருடைய இயற்பெயர் திருவெண்காடர் இவர் காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகத்தொழில் புரிந்து வந்த பெருஞ்செல்வர் சிவநேசர் - ஞானகலை தம்பதியருக்கு மகனாக பிறந்தார்.

பதினோராம் திருமுறையில் இவரது பெயர் பட்டினத்தடிகள் எனக் காட்டப்பட்டுள்ளது. எனினும் பட்டினத்தார், பட்டினத்துப்பிள்ளை, பட்டினத்துப் பிள்ளையார் திருவெண்காட்டு அடிகள் என்னும் பெயராலும் இவர் குறிப்பிடப்படுகிறார் இவரது புகார்பட்டினம் பெரிய பட்டணம் ஆதலால் இவரை ‘பட்டணத்தார்’ எனவும் வழங்குகின்றனர்.

கோயில் நான்மணிமாலை
திருக்குழுமல மும்மணிக்கோவை,
திருவிடைமருதூர் மும்மணிக்கோவை,
திருஏகம்பமுடையார் திருவந்தாதி,
திருவெற்றியூர் ஒருபா ஒருபது
என்னும் 5 நூல்கள் இவரால் பாடப்பட்டவை.

### திருவிடை மருதூர்
### காடே திரிந்து எனும் பாடல்

1. காடே திரிந்துஎன்ன காற்றே
புசித்துஎன்ன கந்தைசுற்றி
ஓடே எடுத்து என்ன உள் அன்பு
இலாதவர் ஓங்குவிண்ணோர்
நாடே யிடைமரு தீசர்க்கு
மெய்அன்பர் நாரியர்பால்
வீடே இருப்பினும் மெய்ஞ்ஞான
வீட்டுஇன்பம் மேவுவரே.

2. தாயும் பகைகொண்ட பெண்டிர்
பெரும்பகை தன்னுடைய
சேயும் பகைஉற வோரும்
புகைஇச் செகமும்பகை
ஆயும் பொழுதில் அருஞ்செல்வம்
நீங்கில்இங்கு காதலினால்
தேயும்நெஞ் சேமரு நீசர்பொற்
காதம் சுதந்திரமே

## அலகு -5

**நேர்காணல்**

புகழ்பெற்ற விளையாட்டு வீரர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் போன்றவர்களை நேரில் சந்தித்து அவர்கள் துறை சார்ந்த பயன்தரும் நல்ல வினாக்களை கேட்டு அவர்களிடத்தில் நல்ல கருத்துக்களை அறிந்து கொள்வதே நேர்காணல் ஆகும்.

**சான்றாக :**

கவிஞர் வைரமுத்து அவர்களை நேரில் சந்தித்து நேர்காணுதல்.

**நாளிதழுக்கு அறிக்கைத் தயாரித்தல்**

கல்லூரியில் நடைபெற்ற விழா அல்லது தம் ஊரில் நடைபெற்ற பொதுநலம் சார்ந்த விழாக்கள் குறித்தும் அதில் பங்கேற்ற சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் குறித்தும் விரிவாக தயாரித்து நாளிதழுக்கு அனுப்புதல்.

**பாடப்பகுதியையொட்டிய இலக்கிய வரலாறு**

சைவ, வைணவ சமய இலக்கியங்கள், கிறிஸ்துவமும் தமிழும், இஸ்லாமியமும் தமிழும்.

**************